**2023 –ம் வருடம் ஜனவரி மாதம் 27 – ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடந்தேரிய சாதாரணக் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை:– திருமதி. எல். ஷீலா கேத்திரின்,**

**நகரமன்ற தலைவர்.**

**420. ந.க.எண்.சி1/2854/2021**

குன்னூர் நகராட்சி ஆணையர் திரு. தே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் டிசம்பர் 2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.

**421. ந.க.எண்.எச்2/2022**

இந்நகராட்சியில் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் – 22 எண்ணிக்கை.

பதிவு செய்யப்பட்ட இறப்புகள் – 11 எண்ணிக்கை.

அலுவலக குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.

**422. ந.க.எண். 1117/2022/ இ2**

இந்நகராட்சிக்குட்பட்ட அட்டடி நகராட்சி பள்ளி அருகில் சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவ்விடத்தில் சாலையின் நடுவே இடையூறாக உள்ள ஒரு மின் கம்பத்தினை மாற்றி பொதுமக்களுக்கு இடையூறு இல்லா வண்ணம் அருகில் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ.29270/– மதிப்பீடு வரப்பெற்றுள்ளது. எனவே அத்தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. சாலைப்பணிகள் பாதிக்காமல் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது

**423 ந.க.எண். 2466/2009/ இ2**

இந்நகராட்சிக்கு புதியதாக வாங்கப்பட்ட கழிவு நீர் வாகனம் TN 43M 2556–ற்கு பதிவுக்கட்டணம் ரூ.3,44,985/– மற்றும் சாலை வரி மற்றும் பசுமை வரிகள் ரூ.69,915/– என மொத்தம் ரூ.4,14,900/–யினை வட்டாரப்போக்கு வரத்து அலுவலகம், உதகை அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருத்தில் கொண்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது

**424 ந.க.எண். இ2/4779/2022**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 43B 9689 வாகனம் பழுதுகள் ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் அருகில் உள்ள பணி மனையில் விட்டு பழுதுகள் சரி செய்யப்பட்டது. தற்போது பழுதுகள் சரி செய்தமைக்கு Sri Amman Auto Garage Coonoor நிறுவனத்திடம் இருந்து பட்டியல் தொகை ரூ.**21310**/– வரப்பெற்றுள்ளது. எனவே ரூ.**21310**/–யினை Sri Amman Auto Garage Coonoor நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு: வாகனம் ஓடிக்கொண்டிருக்கும் போது பழுது ஏற்பட்டு சாலையின் ஓரம் நிறுத்தப்பட்டது. எனவே, பணியின் அவசியம் கருதி பணி மனையில் விட்டு பழுதுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அலுவலக குறிப்பு அங்கிகரிக்கப்பட்டது

**425 ந.க.எண் 2949/2016/அ6**

குன்னூர் நகராட்.க்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண். **2**–ல் மவுண்ட்பிளசன்ட் பகுதியில் இயங்கி வரும் சொர்ணப. ஹெவுசிங் மைக்ரோ பைனஸ் லிமிடெட் தனது நிறுவனத்தை கோவைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொழி.வ்ரி விதிப்பு எண். **065/002/900003**–க்கு **2021–2022** ஆம் ஆண்டு முதல் **2022–2023**ம் ஆண்டு வரை நிலுவை தொகை ரூ. **3750** /– உள்ளது. எனவே மேற்படி

உள்ள வரி விதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை கணினியிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**426 ந.க.எண். 3221/2022/இ2**

இந்நகராட்சிக்கு சொந்தமான கிரேஸ் ஹில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கீழ்காணும் வேதிப் பொருட்கள் தேவைப்படுகிறது.

1. Chlorine cylinder (Gas) - 4 Nos
2. Alum - 8 Nos
3. Lime powder - 500 kgs
4. Bleaching powder - 500 kgs

எனவே மேற்படி வேதிப் பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்வதற்கும் அதற்காகும் செலவுத் தொகை ரூ. 2,60,000 /– க்கும் செலவினத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**427 ந.க.எண்.அ4 /670/2016**

**அ)** குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான உட்புற மற்றும் வெளிப்புற சந்தை கடைகளில் கீழ்காணும் வரியில்லா இன எண்கள் கொண்ட கடை குத்தைதாரர்களிடம் நிலுவைத்தொகை செலுத்தக்கோரி பலமுறை நேரில் அறிவுறுத்தியும், அறிவிப்புகள் வழங்கியும் நிலுவைத் தொகையினை செலுத்தப்படாத காரணத்தினால் 06/10/2022 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

| வ. எண் | வரியில்லா இன எண் | பெயர் | நிலுவை காலம் | செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை |
|---|---|---|---|---|
| 1<br>2 | 065/98<br>065/99 | திரு.சாஜன் வர்கீஸ் | 2016 –17 நவம்பர் முதல் 2022 –23 ஜீன்வரை | 24,54,175/–<br>24,54,175/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 065/87 | திரு.பி.சக்திவேல் | 2016 –17 ஜீலை முதல் 2022 –23 ஜீன்வரை | 1,51,008/– |
| 4 | 065/88 | திரு.ராஜன் பாபு | 2016 –17 ஜீலை முதல் 2022 –23 ஜீன் வரை | 2,27308/– |
| 5 | 065/54 | திரு.ஆர்.டி.கோபால் கிருஷ்ணன் | 2017 –18 செப்டம்பர் முதல் 2022 –23 வரை | 7,59,351/– |
| 6 | 065/1098 | திரு.ரஹமத்துல்லா | 2016 –17 ஜீலை முதல் 22 –23 ஜீன் வரை | 1,80,442/– |
| 7 | 065/1129 | திரு.சுப்ரமணி | 2016 –17 ஜீலை முதல் 22 –23 ஜீன் வரை | 3,74,784/– |
| 8 | 065/1131 | திரு.கிருஷ்ணன் | 2016 –17 ஜீலை முதல் 22 –23 ஜீன் வரை | 3,62,379/– |
| 9 | 065/1146 | திரு.எஸ்.எ.அலாம் | 2016 –17 ஜீலை முதல் 22 –23 ஜீன் வரை | 4,45,051/– |

மேற்காணும் 9 கடை குத்தகைதார்கள் மீது நீதிமன்ற வழக்கு தொடா்ந்து தொகையினை வசூலிக்கவும் அக்கடைகளை பொது ஏலத்தில் விட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**428 ந.க.எண்.அ4 /670/2016**

**ஆ.** குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் வரியில்லா இன எண்கள் கொண்ட கடைகளின் குத்தகைதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ள விவரமும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரியில்லா இன எண் | பெயர் | மேல்முறையீட்டு வழக்கு எண் | செலுத்தப்படவேண்டிய நிலுவை தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 065/177 | திரு.பி.கே.மாதவன் | 507/2022 | ––––––– |
| 2 | 065/56 | திரு.எம்.எம்.போஜன்/ | 508/2022 | 5,16,999/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பி.கணேஷ் | | |
| 3 | 065/82 | திரு.T.M.John & Sons | 509/2022 | 5,82,426/– |
| | 065/86 | திரு.T.M.John & Sons | | 3,45,759/– |
| 4 | 065/148 | திரு.என்.சேகர் | 859/2022 | 7,49,316/– |
| 5 | 065/49 | திரு.கே.பிரேம் & கே.அசோக் | 861/2022 | –––– |
| | 065/50 | திரு.கே.பிரேம் & கே.அசோக் | | –––– |
| 6 | 064/84 | திரு.வி.ஆறுமுகம் | 864/2022 | 4,35,967/– |
| 7 | 065/26 | திரு.மகேந்திரகுமார்& திரு.லலித்குமார் | 865/2022 | 61,731/– |
| 8 | 065/41 | திரு.சி.பி.சாமுவேல் | 866/2022 | 4,18,174/– |
| 9 | 065/54 | திரு.ஆர்.பி.கோபாலகிருஷ்ண ன் | 867/2022 | 7,59,351/– |
| 10 | 065/51 | மஹாவீர்சந்த் & தினேஷ் | 868/2022 | –––– |
| 11 | 065/81 | திரு.ரஞ்சவர்கீ. | 869/2022 | 4,08,614/– |
| 12 | 065/85 | வி.சி.குருவில்லா | 884/2022 | –––– |
| 13 | 065/48 | கூ.பிரேம் சந்த் & மகேந்திரன் | 927/2022 | 3,81,574/– |
| 14 | 065/95<br>065/796 | ஆர். பாலகிருஷ்ணன் | 35028/2022 | 5,49,390 /–<br>3,12,022 /– |

மேலும் மேற்காணும் வழக்குகளுக்குரிய வழக்கு கட்டணத்திற்கு ஆகும் செலவுத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**429 ந.க.எண்.அ4 /670/2016**

குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் வரியில்லா இன எண்கள் கொண்ட கடைகள் முழுவதும் சேதமடைந்து கடையே இல்லாத நிலையில் இருக்கிறது.

| வ.எண் | வரியில்லா இன எண் | பெயர் | நிலுவை |
|---|---|---|---|
| 1 | 065/1013 | திரு.சுதீர் | 34,815/– |
| 2 | 065–767 | திரு.நாராயணன் | 12,045/– |

எனவே, மேற்காணும் இரண்டு வரியில்லா இன எண்களுக்குரிய நிலுவைத் தொகையினை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய (ரசவைந டிகக) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**430 ந.க.எண்.அ2 /1989/2022**

குன்னூர் நகராட்சி 16 வது வார்டு பகுதியில் உள்ள அருள்மிகு விநாயகர் கோவிலுக்கு சொந்தமான மண்டபம் மற்றும் கணேஷ் தியேட்டர் கொண்ட சொத்து வரி விதிப்பு எண்கள் கீழ்கண்டவாறு.

| வ.எண் | சொத்து வரி விதிப்பு எண் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 065/15017 | ரூ.654262/– |
| 2. | 065/15021 | ரூ.123149/– |
| 3. | 065/15011 | ரூ.1116768/– |
| **மொத்தம்** | | **ரூ.1894179/–** |

1995–1996 முதல் 2021–2022 வரை நிலுவையாக உள்ள தொகை ரூ.1894179/–ஐ வசூல் செய்வதற்கு பலமுறை நேரில் சென்று அறிவிப்புகள் மற்றும் ஜப்தி அறிவிப்புகள் வழங்கியும் வரித் தொகை இது நாள் வரை செலுத்தப்படவில்லை. எனவே மேற்படி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் அவர்களின் குறிப்பின் படி விநாயகர் கோவிலுக்கு சொந்தமான மண்டபம் மற்றும் கணேஷ் தியேட்டர் ஆகிய இரண்டு கட்டிடத்தின் மீது சட்டரீதியாக வழக்கு தொடர்ந்து நிலுவை தொகையினை வசூலிக்கவும் மற்றும் அதற்கான ஏற்படும் வழக்கு கட்டனத்தை அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**431 ந.க.எண். 956/2007/அ7**

குன்னூர் நகராட்சியின் வரியில்லா இனங்களுக்கு வசூலிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரிக் கட்டணம் (GST) பிரதி மாதம் 10 ஆம் தேதிக்குள் மத்திய கலால்வரி மற்றும் சேவை வரித்துறை அவர்களுக்கு இணையதளம் மூலம் செலுத்துவதற்கு திரு. செந்தில்குமார், எஸ்.வி. கன்சல்டன்ட்,

பெட்போர்டு அவர்கள் வாயிலாக செலுத்தப்பட்டு வருகிறது. அவருக்கான கட்டணத் தொகை தோராயமாக ரூ. 30,000 /– பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**432 ந.க.எண். இ4/2023**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டிலுள்ள சமுதாயக் கூடத்திற்கு மராமத்து பணிகளான சுவற்றில் வர்ணம் பூசுதல், கதவு, ஜன்னல்களுக்கு வர்ணம் பூசுதல், மின்சார வசதி செய்தல் மற்றும் பிளாட் பார்ம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1.50 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும், பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ளவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**433 ந.க.எண். எச்1/28/2019**

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் தற்பொழுது வெளிகொணர்வு முறையில் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவைப்படும் 82 துாய்மைப் பணியாளர்களை கொண்டு பழைய வலைப்புள்ளி வீதத்தில் அனைத்து தெருக்கள் மற்றும் சாலைகள் துாய்மை செய்தல் வீடுகள் தோறும் குப்பைகளை பிரித்து வாங்குதல் கால்வாய்கள் துார்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளவும் திருவாளர் சக்தி சொல்யூசன்ஸ் நிறுவனம் பணிகள் மேற்கொண்டு செய்து வருகிறார்கள். தற்போது வெளிக்கொணர்வு முறையயில் (Out Sourcing) 31.01.2023 தேதியுடன் முடிவடைவதால் துாய்மை பணிகள் நல்ல முறையில் நடைபெறவும் அத்தயாவசியம் தேவை கருதியும் நிர்வாக நலன் கருத்தில் கொண்டு திருவாளர் சக்தி சொல்யூசன்ஸ் குன்னூர் அவர்களுக்கு மேலும் 2 மாத காலத்திற்கு மட்டும் 01.02.2023 முதல் 31.03.2023 வரை பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.42,00,000 (ரூபாய் நாற்பத்தி இரண்டு லட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **11.11.2022**ம் தேதிய ந.க.எண். **24608/2022/EA2** எண்ணுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.**33552/2022/EA2–SWM-19** நாள்– **10.01.2023**–ன்; படியும் குன்னூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளான வீடு வீடாக குப்பைகள் வாங்குதல், வணிக நிறுவனங்களில் குப்பைகளை சேகரித்தல் போன்ற பணிகளை தனியார் சேவை வாங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் முலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் முன்றாண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு உரிய வழிகாட்டுதல்கள் பிறப்பிக்கப்பட்டு நிர்வாகம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| Name of the Municipality | Quantity of waste generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimate Base Cost Per Day (Rs. in lakhs) | Estimate Base Cost Per year (Rs. in lakhs) | Applicable GST 18% and LWF1% (Rs. in lakhs) | Estimate Total Cost Per year (Rs. in lakhs) |
|---|---|---|---|---|---|---|
| Coonoor | 14.01 | 5766 | 0.81 | 295.65 | 56.17 | 351.82 |

மேலும் நகராட்சியின் வாகனங்களை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர்களிடம் வழங்கிடவும் நாளொன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்தும், அதனை மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. Annexure-1 Details of Available Vehicle

| S.No | Category | Available Vehicles Nos | After ULB use available for Rent | Rent Fixed Per Day | Collectable rent Per Day |
|---|---|---|---|---|---|
| 1 | LCV | 12 | 9 | 200 | 1800 |
| 2 | HCV | 1 | 0 | 400 | 02 |
| | TOTAL | 13 | 09 | - | 1800 |

மேலும், தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிகளின் விபரம் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Annexure-2 Details of Permanent Workers

| Activity | No of Permanent Sanitary Worker assigned | Type | LCV | HCV |
|---|---|---|---|---|
| MCC/Windrow/ BMP wet waste processing centers | 6 | | | |
| RRC- Dry waste handling Centers | 2 | | | |
| Park Sweeping | 2 | | | |
| For Bus Stand | 6 | LCV | 1 | |
| For Market | 13 | HCV | | 1 |
| Bushes removal | 5 | LCV | 1 | |
| Road side earth removal | 1 | | | |
| For drain cleaning | 3 | | | |
| CT / PT Toilets | 10 | | | |
| For Road and street sweeping | 13 | LCV | 1 | |
| **Total** | **61** | | 3 | 1 |

மேலும், தனியார் ஒப்பந்ததாரர் மேற்கொள்ளவேண்டிய பணிகள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. Annexure-3 Details of of the SWM activities to be engaged by the private service / provider

| S.No | Descrition of the activity | Nos |
|---|---|---|
| 1 | Door to Door Colleciton of segregated waste from Households LCV and handovers the waste to processing center / handling facilities | 12732 Households |
| 1 | Door to Door Colleciton of segregated waste in the small size commercial establishment using Low Commercial Vehicle and handover the waste to processing center / handling facilities | 1427 Commercial establishment |

மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி பெற்று தனியார் சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் முலம் பணிகளை மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கு ஒரு வருடத்திற்கு ஆகும் செலவினத் தொகை ரூ. **351.82** லட்சத்திற்கு இத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும்

இதன் பொருட்டு முன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.

**435 சி2/2022**

**திரு. கே. நாகராசன் 13–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்டத் தீர்மானம்.**

**1.** வண்ணாரப்பேட்டை விநாயகர் கோயில் தெரு பகுதியில் உள்ள கவுர கல்யாண மண்டபத்தின் அருகில் உள்ள நடைபாதை , தடுப்புச் சுவர் அருகில் வலைக் கம்பி வேலி மற்றும் நடைபாதை அமைத்து தரக் கோரியுள்ளார்.

**2.** ஆப்பிள் பீ பகுதியில் திரு. சாக்கோ வீட்டு அருகில் நடைபாதை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தரக் கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**436 சி2/2022**

**திரு. ந. ராஜேந்திரன் 14–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்டத் தீர்மானம்.**

ஒட்டுப்பட்டரை 14–வது வார்டில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு அருகில் 100 ஆண்டு காலமாக உள்ள தண்ணீர் தொட்டி பயன்பாடு அற்ற நிலையில் உள்ளது. தற்போது கூட்டுறவு பண்டகசாலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி நடைபெற உள்ளதால் இத்தண்ணீர் தொட்டியை அப்புறப்படுத்தி தருமாறு கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**437 சி2/2022**

**திருமதி. எஸ். வசந்தி 20–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்டத் தீர்மானம்.**

ரெய்லி காம்பவுண்ட் பகுதியில் கேரளா சமாஜம் முன்பிலிருந்து வாசிம் வீடு வரையிலும் கழிவு நீர் கால்வாய் முற்றிலும் சேதமடைந்து கழிவு நீர் நடைபாதையில் செல்வதால் பொது மக்கள் நடப்பதற்கு மிகவும் சிரரமாக உள்ளது எனவே இக்கழிவு நீர் கால்வாயை சரிசெய்து தருமாறு கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**438 சி2/2022**

**திருமதி. ஐ. பாக்கியவதி 10–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்டத் தீர்மானம்.**

**1.** அம்பேத்கார் நகர் **10**வது வார்டில் அனைத்து நடைபாதைகளும் சேதமாக உள்ளது. எனவே இந்நடைபாதைகளை சீரமைத்து தருமாறு கோரியுள்ளார்.

**2.** அம்பேத்கார் நகர் மின்விளக்குகள் சரிவர இயங்குதில்லை. மின்விளக்குகளை சரிசெய்து தருமாறு கோரியுள்ளார்.

**3.** மின்கம்பங்கள் பல இடியும் மற்றும் சேதமாக உள்ளது. இதை சீரமைத்து தருமாறு கோரியுள்ளார்.

**4.**அம்பேத்கார்நகர் பகுதியில் உள்ள தடுப்புச் சுவர்கள் மிகவும் சேதமாக உள்ளது. எனவே அதனை சீரமைக்க கோரியுள்ளார்.

**5.** டைகர் ஹில் பகுதியில் புதிய மின்விளக்குகள் அமைத்து தருமாறு கோரியுள்ளார்.

**6.** டைகர் ஹில் பகுதியில் சாலை சேதமாக உள்ளது. அதனை சீரமைத்து தருமாறு கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**439 சி2/2022**

**திருமதி. வே. செல்வி 15–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்டத் தீர்மானம்.**

**1.** முத்தலாம்மன் கோயிலுக்கு முன்புறம் கழிவு நீர்கால்வாய் மிகவும் பழுதடைந்து உள்ளது. இக்கழிவு நீர்கால்வாய்க்கு மூடியுடன் கூடிய மழைநீர் வடிக்கால் மற்றும் நடைபாதை அமைத்து தரக் கோரியுள்ளார்.

**2.** கோயிலுக்கு முன்புறம் உள்ள படிக்கட்டுகள் பழுதடைந்து உள்ளது. இந்த படிக்கட்டுகளை சீரமைத்து தர கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

440 சி2/2022

திரு. வி. உமா வினோத்குமார் 29–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்டத் தீர்மானம்.

1. காந்திபுரம் இந்திராநகர் பகுதியில் குறைந்த மின் கம்பங்கள் உள்ளது. புதிதாக மின் கம்பங்கள் அமைக்க கோரியுள்ளார்.

2. காந்திபுரம் பகுதியில் 7 மின் கம்பங்கள் உள்ளது. அதில் புதிய மின் விளக்கு அமைக்க கோரியுள்ளார்.

3. காந்திபுரம் பள்ளி குழந்தைகள் செல்லும் படிக்கட்டுகள் மிகவும் பழுது அடைந்து ஆபத்தான முறையில் உள்ளது. அதனை சீரமைத்து தருமாறுக் கோரியுள்ளார்.

4. காந்திபுரம் இந்திராநகர் பகுதியில் உள்ள தண்ணீர் தொட்டி மகிவும் பழுது அடைந்து உள்ளது அதை சரி செய்ய கோரியுள்ளார்.

5. காந்திபுரம் இந்திராநகர் பகுதியில் உள்ள அங்கன் வாடியில் மின் இணைப்பு மற்றும் குழந்தைகளுக்கு கழிப்பிட வசதியும் அமைக்க கோரியுள்ளார்.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒம்/– திருமதி. எல். ஷீலா கேத்திரின்,
நகர மன்றம் தலைவர்.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குன்னூர் நகராட்சி.